# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHICase No. Case No. STC 811 /2017

Defence Witness 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கீதா | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.அமர்நாத் | Calling | : |
| Village | : பொள்ளாச்சி | Religion | : |
| Taluk | : | Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of January 2026.

(புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>மனுவின்பேரில் எதிரி தரப்பில் முதல் விசாரணை</u>:

1. நான் பொள்ளாச்சியில் வசிக்கிறேன். Event மேனேஜ்மென்ட நடத்தி வருகிறேன். எனது அப்பா சண்முகவேல் என்பவர் மஞ்ச் மில் நடத்தி வந்தார். கடந்த 2011 -2012 வருடததின்போது MSME நிதி நிறுவனத்தில் கடன் கிடைக்கவில்லை, அதனால் செந்தில்குமார் என்ற நபரிடம் சொத்தை அடைமான பத்திரம் எழுதிக்கொடுத்து முதலில் 20 லட்சம் ரூபாய் எனது தந்தையும் தாயும் கடன் வாங்கினர்கள். அதன்பிறகு 10 லட்சம் ரூபாய் அதே தேவைக்காக கடன் வாங்கப்பட்டது.

2. மேற்படி அடமான ஆவணத்தின் காலம் 11 மாதம் என்பதால் செய்தில்குமார் அவர்கள் அடமான பத்திரத்தை முடித்து வேறு ஒரு நபரான சக்திவேல் என்பவரின் பெயரில் மீண்டும் அடமான பத்திரம் எழுதப்பட்டது. 2015 – 2016 காலகட்டங்களில் என் தந்தை பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டார். 2011 - 2012 அடமான பத்திர தேதியில் இருந்து எனது தந்தைக்கு பக்கவாதம் ஏற்பட்ட நாள்வரை மாதம் தவறாமல் அவருக்கு ரூபாய் 60 ஆயிரம் வட்டி கொடுத்து வந்தோம். 2016ம் வருடம் எனது தந்தை இறப்புக்கு பிறகு அடமானம் வைத்த சொத்தை விற்பனை கொண்டு வந்து சபரி என்ற நபருக்கு விற்பனை செய்து அதிபதி என்ற நபரின் வீட்டில் வைத்து பணத்தை பைசல் பேசி செநதில்குமார் என்ற நபருக்கு முழுவதுமாக கொடுக்கப்பட்டது. மறுதினம அடமான பத்திரத்தை ரத்து செய்து கொடுக்கவேண்டும் என்று செந்தில்குமாரும் ஒப்புக்கொண்டார்.

3. 2017ம் வருடத்தின் கடைசியில் ஒப்புக்கொண்டதைப்போல் ஆனைமலை சார் பதிவாளர் அலுவலக்தில் வைத்து அடமான பத்திரம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. அந்த ஆவணத்தின் அசலை என்னிடம் கொடுத்துவிட்டார்கள். ஆனால் 5 காசோலைகளை அவர்கள் கொடுக்கவில்லை. மறுதினம் செந்தில்குமார் வீட்டிற்கு சென்றேன். 4 காசோலைகளை அவர் எனக்கு கொடுத்துவிட்டார். மீதம் ஒரே காசோலை damage ஆகிவிட்டது என்று 2 நாட்கள் கழித்து வரச்சொன்னார். நான் சென்றபோது செந்தில்குமார் என்பவரின் மனைவி மட்டுமே இருந்தார். சரியான தகவல் கொடுக்கவில்லை. அந்த வாரத்தில் மொத்தம் 2 முறை செந்தில்குமார் வீட்டிற்கு சென்றேன். சரியான பதில் இல்லை. 10 நாட்களுக்குள் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது. சரிவர பதில் அளிக்காததால் அதிபதி அவர்களிடம் சென்று இதனை கூறினேன். அவரும் செந்தில்குமாரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு

கொள்ள முயற்சி செய்தார். ஆனால் அவர் அதற்கு பதில் அளிக்கவில்லை. என் மீது பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகாரை தள்ளுபடி செய்து என்னை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.